தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/tm040211

Short Tales from Multiple Perspectives

J. Stanley Victor, Ph.D., Research Scholar, Dept of Tamil, Kadhir Mohideen College, Affiliated to Bharathidasan University, Adhirampattinam, Tanjore.
Email: stanleymaggie2009@gmail.com,
Dr. Sabira Begum, Research Guide, Dept of Tamil, Kadhir Mohideen College, Affiliated to Bharathidasan University, Adhirampattinam, Tanjore.
Email: dr.sabhira.kmc@gmail.com

Abstract:
This research paper, titled "Short Tales from Multiple Perspectives," provides a comprehensive study of the short tale. It begins by establishing a theoretical framework that defines the form and its terminology. The paper then incorporates the critical insights of scholars Xavier Antony and L.A. Francis Xavier before conducting a wide-ranging analysis of short tales as they appear in moral texts, Sangam literature, epics, and poems. The overall goal is to demonstrate the short tale's evolution, cultural significance, and enduring role in transmitting wisdom.

Keywords: *Brahmin, Baral, Kutti, Kurulai, Kutravan, Koduvahaja, Kakkaipala, Katichai, Fiction, Oral story, Kukavi, Calf, Child, Banana sapling, Kootungai.*

References:
1. Vairamuthu. (2019). *Thamizhatruppadai* [A guide to the Tamil river]. (1st ed.). Priyadharshini Printograph.
2. Sakthivel, S. (2003). *Naattuppura iyal aayvu* [A study of folklore]. (4th ed.). Manivasagar Pathippagam.
3. Xavier Antony, S. J. (2016). *150 seyal thoondum kutti kathaigal: Thoguthi - 2* [150 action-inspiring short stories: Volume 2]. (3rd ed.). Vaigarai Pathippagam.
4. Francis Xavier, L. (S. J.). (2002). *Thamizhil kutti kathaigal: Oor aayvu* [Short stories in Tamil: A study]. (1st ed.). Mani Offset Pathippagam.
5. Xavier Antony, S. J. (2016). *300 kutti kathaigal* [300 short stories]. (1st ed.). Bhagya Publishers.
6. Xavier Antony, S. J. (2016). *Munnetra paathai kaattum kutti kathaigal: Kutti kathai varisai – 02* [Short stories that show the path to progress: Short story series – 02]. (1st ed.). Vaigarai Pathippagam.
7. Xavier Antony, S. J. (2013). *Sinthikka sila kutti kathaigal: Vizhippunarvu kathai varisai* [A few short stories for thought: Awareness story series]. (1st ed.). Vaigarai Pathippagam.
8. Subramanian, S. V. (2006). *Tholkappiyam thelivurai* [A clear commentary on Tholkappiyam]. (8th ed.). Manivasagar Pathippagam.
9. "சூ. இன்னாசி பதிப்பகம்" (S. Innasi Pathippagam) appears to be the name of a publisher. Without a title, author, or publication year, a full APA citation cannot be created.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

License
This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

tamilmanam

பன்முகப் பார்வையில் குட்டிக்கதைகள்

ஜோ. ஸ்டேன்லி விக்டர், முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காதிர் முகைதீன் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிராம்பட்டினம், தஞ்சாவூர்.
Email: stanleymaggie2009@gmail.com

முனைவர் சபீரா பேகம், நெறியாளர், தமிழ்த்துறை, காதிர் முகைதீன் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிராம்பட்டினம், தஞ்சாவூர்.
Email: dr.sabhira.kmc@gmail.com

ஆய்வுச் சுருக்கம்:

இந்த ஆய்வுக்கட்டுரையில், "பன்முகப் பார்வையில் குட்டிக்கதைகள்" என்ற தலைப்பில், பின்வரும் பிரிவுகளின் கீழ் உள்ள கருத்துக்களை விரிவாக ஆராய்வோம்: அறிமுகம், கலைச்சொற்கள், குறுகிய கதையின் வரையறை மற்றும் சொற்பிறப்பியல் (பெயர்க்கான காரணம்), குறுகிய கதைகள் குறித்து சேவியர் ஆண்டனி மற்றும் எல்.ஏ. பிரான்சிஸ் சேவியர் போன்றோரின் கருத்துக்கள், நீதி நூல்கள், சங்க இலக்கியம், இதிகாசங்கள் மற்றும் கவிதைகளில் காணப்படும் குறுகிய கதைகளின் விளக்கங்கள், இறுதியாக முடிவுரை மற்றும் சுருக்கத்துடன்.

இந்தக் கூறுகளைப் பட்டியலிடுவதோடு மட்டுமல்லாமல், குறுகிய கதையின் பன்முகத் தன்மையைப் புரிந்துகொள்வதும், பல்வேறு கலாச்சார மற்றும் வரலாற்று நிலப்பரப்புகளில் அதன் பரிணாம வளர்ச்சியையும் நீடித்த பொருத்தத்தையும் கண்டறிவதும் எங்கள் நோக்கமாகும். ஆரம்பப் பகுதிகள், இந்தக் கதை வடிவத்தை வரையறுக்கும் மொழி நுணுக்கங்கள் மற்றும் கருத்தியல் எல்லைகளை ஆராய்வதன் மூலம் வலுவான கோட்பாட்டு வடிவமைப்பை உருவாக்கும். சுருக்கம், கதை நோக்கம் மற்றும் கருப்பொருள் செறிவு போன்ற கேள்விகளை இது கையாளும். தொடர்ந்து, சேவியர் ஆண்டனி மற்றும் எல்.ஏ. பிரான்சிஸ் சேவியர் போன்ற அறிஞர்கள் வழங்கும் விமர்சன நுண்ணறிவுகளை ஆராய்வதன் மூலம், பல்வேறு பகுப்பாய்வு அணுகுமுறைகளை ஒப்பிட்டு, இந்தக் குறுகிய கதைகளைப் பற்றிய நமது புரிதலை வெவ்வேறு கல்விசார் கண்ணோட்டங்கள் எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள முயல்வோம்.

நமது ஆய்வின் மையப்பகுதி, பல்வேறு இலக்கிய மரபுகளுக்குள் பொதிந்துள்ள குறுகிய கதைகளின் ஒப்பீட்டு பகுப்பாய்வில் உள்ளது - பண்டைய நீதி நூல்களின் சுருக்கமான போதனைகளிலிருந்து, சங்க இலக்கியத்தின் செழுமையான கதைப் பின்னல்கள் வரை, இதிகாசங்களில் காணப்படும் தொடர்கதைகளின் பிரம்மாண்டத்திலிருந்து, கவிதை வரிகளின் சுருக்கமான வெளிப்பாட்டு சக்தி வரை. இந்தக் கண்ணோட்டப் பார்வை stylistic மற்றும் கட்டமைப்பு ஒற்றுமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவது மட்டுமல்லாமல், இந்த வகைகளில் உள்ள குறுகிய கதைகளை வேறுபடுத்திக் காட்டும் தனித்துவமான கலாச்சார சாயல்களையும் வெளிச்சம் போட்டுக் காட்ட முயல்கிறது. இறுதியில், மனிதப் புரிதலை வடிவமைப்பதிலும், ஞானத்தைப் பரப்புவதிலும், கூட்டு நினைவகத்தைப் பாதுகாப்பதிலும் இவற்றின் பரவலான பங்கினை இது வெளிப்படுத்தும்.

திறவுச்சொற்கள்: பார்ப்பினி – பார்ப்பு- பரல்- குட்டி - குருளை -கூற்றவண்- கோடுவாழ் – காக்கைப்பலா- கடிச்சை- புனைகதை- - வாய்மொழிக்கதை- குழவி- கன்று- பிள்ளை- வாழைக்கன்று- கூடுங்காய்.

முன்னுரை:

தமிழில் சிறுகதை என்ற முயற்சி பாரதியில் முளைத்து வவேசு ஐயரின் வளர்ந்து மணிக்கொடியில் செழித்து பொதுஉடைமையில் பூத்து திராவிட இயக்கம் வரை காய்ந்து குலுங்கினாலும் அதன் உருவம் பழுத்தது புதுமைப்பித்தனில் தான்"[1] என்று சொல்லத் தோன்றுகிறது.

"உலகில் முதல்மொழியும் அடுத்து வாய்மொழிய இலக்கியங்களும் அவற்றை தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் தோன்றின"[2] என்பார் முனைவர் சு.சக்திவேல்.

குட்டிக்கதை வரையறை:'

"அறக்கருத்தை உணர்த்தும் முக்கிய நோக்கோடு, அஃறிணை உயிர்களையும் கதைப் பாத்திரங்களாய்க் கொண்டு, கருத்துக் குறித்த செய்தியை உவமையாகவோ, உருவகமாகவோ, குறியீடாகவோ உள்ளடக்கி, அக்கருத்துக்கு, விளக்கமாகவோ. எடுத்துக்காட்டாகவோ சில பத்திகளில் நிகழ்ந்து முடிவதாய், வாய்மொழிப் பாணியில் அமைந்த கதை இலக்கியமே குட்டிக் கதையாகும்"[3]

குட்டிக்கதை பெயர்க்காரணம்:

'குட்டிக்கதை' என்னும் சொல்லாட்சி தமிழகத்தில் நெடுங்காலமாகவே உள்ளது. ஆயினும், முதன்முதலாய் எப்போது அது வழக்கிற்கு வந்தது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. 'குட்டி' என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே இளமையைக் குறிக்கும் அஃ றிணைச் சொல்லாய் வழக்கில் இருந்துள்ளது. தொல்காப்பியர் பொது மரபிற்கு இளமைப்பெயர்கள் பற்றிக் கூறுகையில் குட்டி என்னும் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார் என்பதை பின்வரும் நூற்பாக்களால் அறிய முடிகிறது.

"மாற்றொரு சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்க்கும் பரலும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மிகவும் மரியும் என்று
ஒன்பதும் குளவியொடு இளமைப் பெயரே"[4]

"குட்டியும் பரலும் கூற்றவன் வரையார்"[5]

"கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப"[6]

"குட்டிக்கதைங்குற பெயர் எதனால் வந்திருக்கும்னா குட்டிநாய் அப்படின்னு சொல்றோம். சிறியதுங்குறதுனால அப்படிச் சொல்றோம். எனவே சிறியது என்கிறதுல இருந்துதான் குட்டி கதைங்கிறது வந்தது. சிறியதாய் இருக்கிற கதை குட்டி கதைனு வந்து இருக்கணும்"[7]

"குட்டி" என்னும் சொல்லுக்கு வீரமாமுனிவர் தமது சதுரகராதியில் தந்துள்ள பொருள் பின்வருமாறு,

"குட்டி, ஆடு, கீரி ,குதிரை, நரி, நாய், பன்றி, புலி, பூனை, முயலுமன்றி குரங்கு முதன் மரக்கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை"[8]

குட்டி என்னும் சொல்லுக்கு மாணவர் தமிழ் அகராதியில் அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் தந்துள்ள பொருள் பின்வருமாறு,

"குட்டி, ஆடு, கீரி, குதிரை, நாய், நரி, பன்றி, புலி, பூனை முதலியவற்றின் குட்டி விலங்கின் பிள்ளை பொது, சிறுமை சிறுபெண், கடைசி மகன், பல்லாங்குழி முதலிய விளையாட்டில் அதிகமாக கூடுங்காய், ஆதாயம், காக்கைப்பலா, கடிச்சை, வாழைக்கன்று."[9]

குட்டிக் கதைகள் பற்றிய சேவியர் அந்தோணியின் சிந்தனைகள்

"ஒரு கருத்தை அல்லது செய்தியை அழுத்தமாக ஆழமாகத் தெளிவாக நேரடியாக சுருக்கமாகச் சரிவாகப் புலப்படுத்துவது"[10] தான் குட்டிக் கதையின் தனிப்பெரும் பண்பாகும்.

குட்டி கதைகள்..

"கலகலப் பூட்டும்! கவர்ந்திழுக்கும் !

கட்டிப்போடும் ! கண்ணியப்படுத்தும் !

கரை சேர்க்கும்! குணப்படுத்தும்!"[11]

இவ்வளவு நல்ல குணங்கள் கொண்ட ஒரு மரபுவழி அருமருந்தை யாராவது விட்டு வைப்பாங்களாம் என்கிறார் முனைவர் சேவியர் அந்தோணி சே.ச.

"கதைகள் வெறும் கதைகள் அல்ல அவை விதைகள்"[12]

பிஞ்சு மனங்களை மட்டுமல்ல இளவட்ட இருதயங்களையும் முதிர்ந்து பழுத்த உள்ளங்களையும் பதம் பார்க்காமல் விடாது. கதைகள் அதுவும் சும்மா விடாது குட்டிக் கதைகள்!

பெயர்தான் குட்டிக் கதைகள்! அவற்றில் பொதிந்து கிடக்கும் சிலிர்க்க வைக்கும் சிந்தனைகளும் கருத்தைக் குடையும் கேள்விகளும் மாறாத சுவையும் மாற்று எண்ணங்களும் மூக்கைத் துளைக்கும் மண்வாசனையும் குட்டிப் பாப்பாவுக்கு சட்டை போட்ட மாதிரி புன்னகைக்க வைக்கும் ஓவியங்களும் ஒவ்வொரு கதையும் உயரத்தில் வைத்திருக்கின்றன.

"கதைகளுக்கு கால்கள் உண்டோ இல்லையோ குட்டிக் கதைகளுக்கு கால்கள் உண்டு."[13]

வாழ்வில் விரக்தி அடைந்தவன் ஒருவன் விடம் குடித்து சாக முடிவெடுத்தான் கடைக்குப் போனான் விடம் வாங்கினான். விஷனத்தோடு குடித்து முடித்தான். ஆனால் சாகவில்லை. காரணம் இடத்தில் கலப்படம் உயிர் பிழைத்தவனை மருத்துவமனைக்கு தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

"உயிரைக் காப்பாற்ற

ஊசி ஒன்றைப் போட்டார் டாக்டர்

ஆனால் அவனும் செத்துவிட்டான்

காரணம்

ஊசி மருந்தில் கலப்படம்!"

மறைந்த சிந்தனைச் சிரிப்பு சிற்பி பொ. மா.இராசாமணி அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பாகச் சொன்ன குட்டிக்கதை இது! சமீபத்தில் யாரோ சொல்லக் கேட்டேன் 50 வருடங்களுக்குப் பிறகும் இந்தக் கதை என் காதை எட்டி விட்டதே எப்படி கால்கள் சிறகுகள் இல்லாமலா?

காலாவதி ஆகாத கால்களோடும் சீரும் சிறப்புமான சிறகுகளோடும் இதுபோன்ற குட்டிக்கதைகள் வலம் வருகின்றன. "ஒவ்வொரு குட்டிக் கதைக்கும் ஓர் ஆன்மா உண்டு"[14] அந்த ஆன்மா அந்தந்த நாடுகளில் பண்பாட்டு மரபுகளோடு தொப்புள் கொடி உறவுகளோடு பின்னிப்பிணைந்து படர்ந்து பரவும் தன்மை படைத்தது.

ஒருசில குட்டிக் கதைகளின் ஆன்மாக்கள் மட்டும் என்றும் அழியா வரத்துடன் ஆனந்தமாக அலைந்து கொண்டிருக்கின்றன. ஆம் அழியாத குட்டிக் கதைகளுக்குள்ளே.. அழியாத ஆன்மா ஓட்டம்!

குட்டிக் கதைகள் பற்றிய இலா. பிரான்சிஸ் சேவியரின் சிந்தனைகள்

"மனிதனைச் சிந்திக்க வைக்கவும் விலங்குணர்வு உடைய அவனைப் பக்குவப்படுத்த மக்குடையவனாய் வாழச் செய்யவும் இறைப்பற்று, நாட்டுப்பற்று, அன்பு, நீதி, உழைப்பு தியாகம் போன்ற மதிப்புகளை அவனுக்குக் கற்பிக்கவும் முனிவர்கள் ஞானிகள் முன்னோர்கள் ஆகியோர் பயன்படுத்திய ஓர் உத்தியே குட்டிக் கதையாகும்"[15]

தமிழில் தொன்றுதொட்டே குட்டிக் கதைகள் சொல்லப்பட்டு வந்துள்ளன. அவற்றில் பல என்று எழுத்து வடிவம் பெற்றுள்ளன. சில கதைகள் காலத்திற்கும் பண்பாட்டுச் சூழலுக்கும் ஏற்ப மாற்றங்கள் அடைந்துள்ளன. புதிய குட்டிக் கதைகளும் தோன்றி வருகின்றன.

கதைகள் முதன்முதலாய் எப்போது தோன்றின என்பதை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது எனினும் எப்படி தோன்றியிருக்கும் என்பதை ஆய்ந்து கூறுதல் ஓரளவு இயலும்.

ஆதிமனிதன் தன் மனத்தூண்டுதலால் தான் நடந்து கொண்ட விதத்திற்கும் செய்த செயலுக்கும் தக்க காரணங்களை ஆராய்ந்தபோது காரண கதைகளும் விளக்கக் கதைகளும் உருவாகி இருக்க வேண்டும். "சமூகம் அன்றைய வாழ்க்கையை எவ்வாறு ஒழுங்குப்படுத்திக் கட்டுப்படுத்தியது என்பதை பல கதைகள் காட்டுகின்றன."[16]

இந்தியாவைக் குட்டிக்கதைகளின் சுரங்கம் எனலாம். "வேதங்களில் நீதிக் கதைகளைக் காண முடிகிறது."[17] மீன்கள், மாடுகள், மரங்கள் முதலியன பேசிக் கொள்ளும் முறையில் அமைந்த கதைகளும் வேதங்களில் காணப்படுகின்றன.

உலக நாடுகள் பலவற்றிலும் மிகப் பழங்காலத் தொட்டே குட்டிக்கதைகள் புராணக் கதைகளாகவும் பல மரபுக் கதைகளாகவும் புனைகதைகளாகவும் நீதிக்கதைகளாகவும் வழங்கி வருகின்றன. "கிரேக்க உறவுமானிய எகிப்திய புராணக் கதைகளும் காப்பிய கதைகளும் உலகப் புகழ்பெற்றவை"[18] ஆகும்.

நீதி நூல்கள்

"ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, மூதுரை, நாலடியார், திருக்குறள் முதலிய நீதி நூல்களும் கூறும் கருத்துக்களை விளக்கும் குட்டிக்கதைகளும் வெளிவந்துள்ளன."[19]

- ஆத்திச்சூடி நீதிநெறிக் கதைகள்
- கொன்றைவேந்தன் நீதிக்கதைகள்
- நன்னெறி விளக்கக் கதைகள்
- திருக்குறள் குட்டிக் கதைகள்

என்னும் நூல்கள் இதற்குச் சான்றாகும்.

எஸ்.ஆர்தர் ஜேம்ஸ் அவர்கள் தம்முடைய நூலான "கதை சொல்கிறார்" பாகம் இரண்டில் எழுதிய நீதிக்கதை பின்வருமாறு,

"அன்பு இல்லையேல்.." என்னும் தலைப்பில் உள்ள கதையில் வரும் ஏழைப் பெண் ஒருத்தி ஒரு துறவியர் இல்லம் சென்று பிச்சை கேட்டாள், அந்த இல்லத்தின் தலைவர் புனித பிரான்சிஸ் அசிசியார் பெண்ணுக்கு பிச்சை கொடுக்கும்படி மற்றொரு துறவியிடம் சொன்னார். அவர், "ஒரு சிறு ரொட்டி துண்டு கூட இல்லையே!" என்றார். வேறு ஏதாவது கொடுக்கும்படித் தலைவர் கூற, நாம் நாள்தோறும் வாசிக்க வைத்திருக்கும் மறைநூல் மட்டுமே உள்ளது என்றார் துறவி. அக்காலத்தில் அச்சுப்பொறி இல்லாததால் சிரமப்பட்டுக் கையால் எழுதப்பெற்ற நூல் அது. அப்போது புனிதர் புத்தகத்தை வாசித்து இரக்கச் செயல்கள் செய்யாமல் இருப்பதைவிட வாசித்ததைச் செயல்படுத்தும் முறையில் இரக்கச் செயல்கள் செய்வது நலம்" என்று கூறி அந்நூலையே பெண்ணுக்குக் கொடுத்து விடச் சொன்னார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறருக்கு "

"நல்ல குடி பிறந்தார் நல் கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து"

என்னும் பாக்களின் கருத்துக்களை விளக்குவதாக இக்கதை அமைந்துள்ளது.

சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களில் காணப்படும் வரலாற்று நிகழ்ச்சிகளும் மரபுச்செய்திகளும் வரலாற்றுச் சான்று கதைகளாகவும் பல மரபுக் கதைகள் ஆகவும் குட்டிக்கதை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

"முதல் நாள் போரில் தந்தையையும் மறுநாள் போரில் கணவனையும் இழந்த வீரப் பெண்ணொருத்தி மூன்றாம் நாளும் போர்ப்பறை கேட்டு தன் ஒரே இளம் மகனைப் போருக்கு அனுப்பி வைத்ததாக ஒக்கூர் மாசாத்தியார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது. இலக்கியம் கூறும் நீதி கதைகள் என்னும் நூலில் கதையாக்கப்பட்டுள்ளது."[20]

தன் மகன் முதுகில் புண்பட்டு மாண்டதாய்க் கேள்விப்பட்ட தாய் ஒருத்தி அது உண்மையாயின் அவனுக்குப் பாலூட்டிய தன் மார்பகங்களை அறுத்தெறிவதாய்க் கூறி போர்க்களம் சென்று தன் மகனது உடலைத் தேடிக் கண்டதும் அவள் மார்பில் புண்பட்டுமாண்டிருந்ததை அறிந்து அவள் மகிழ்ந்த செய்தி புறநானூற்றுப் பாடல் ஒன்றில் காணப்படுகிறது. இச்செய்தி சங்கத்தமிழ் என்னும் நூலில் கதைப்போக்கில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

"உள்ளுறை உவமம் அமைந்த அகப்பாடல் பலவும் குட்டிக்கதை கூறுகளை உள்ளடக்கியவை எனலாம்."[21]

களவொழுக்கம் விரும்பி பகற்குறி வந்த தலைவனுக்குக் கடமையை உணர்த்த எண்ணிய தோழி, தலைவனே உனது மலையில் ஒரு குரங்கு அறியாமையால் மலைத்தேனை மிகுதியாக உண்டு மயக்கமுற்று மரம் ஏறும் செயலினை மறந்து வேற்றிடம் செல்லவும் முடியாமல் அருகில் இருந்த சந்தன மரநிழலில் படுத்து உறங்கியது என்று கூறுவதாக அகநானூற்று பாடல் ஒன்று அமைந்துள்ளது.

களவு ஒழுக்கமே தொடர விரும்பிய தலைவனுக்குத் தலைவியை மணப்பது கடமை என்பதை உணர்த்தும் போது தோழி கையாளும் உவமை ஆகிய குரங்கின் செயலை ஒரு குட்டிக்கதையாய் மாற்றலாம்.

தலைவனுக்கு ஒரு துன்பம் எனில் தலைவி தாங்க மாட்டாள் என்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்துவதாய் அமைந்துள்ள ஒரு குறுந்தொகை பாடலில், கரிய வலிய ஆண் குரங்கு ஒன்று இறந்திட அதன் பிரிவால் ஏற்பட்ட கைம்மைத் துன்பத்தைத் தாங்க மாட்டாத பெண் குரங்கு தன் குட்டிகளைச் சுற்றத்திடும் ஒப்படைத்துவிட்டு மலை மேல் ஏறி விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டது என்னும் செய்தி காணப்படுகிறது.

இச்செய்தியை ஒரு மலையில் வாழ்ந்த குரங்குகளில் ஆண் குரங்கு ஒன்று இறந்துவிட்டது எனத் தொடங்கும் குட்டி கதையாக மாற்றலாம்.

காப்பியங்கள்

தமிழ்க் காப்பியங்களில் பல கிளைக்கதைகள் காணப்படுகின்றன. கிளைக்கதை போக்கில் இருந்து மாறுபட்டது. மையக்கதையின் ஊடே அமைந்திருக்கும் கதை வடிவம் இது. கிளைக் கதைகள் கூற்று முறையில் அதாவது விவரிப்பு போக்கில் அமைந்திருக்கும் மையக்கதை கூறப்படும். அந்தக் காலத்தில் இன்றி அதற்கு முன்பு நடந்ததை மரபு வழி கேட்டறிந்ததே கதைப்படுத்தி கிளைக் கதையாய் கூறியிருப்பார். பாத்திரங்கள் வாயிலாகவோ பிற கற்பனை பாத்திரங்கள் வாயிலாகவோ காப்பியப்

புலவர் தாமே ஊர்வதாகவோ கிளைக் கதைகள் அமைந்திருக்கும் குட்டிக்கதைகளே காப்பியத்தில் இடம்பெறும் போது கிளைக் கதைகள் ஆகின்றன எனலாம்.

சான்றாக, கீரிப்பிள்ளை கதை சிலம்பில் இடம்பெற்று கதைத்தலைவனோடு தொடர்பு படுத்தப்படுகிறது. கிளைக் கதையாய் பரிணமிக்கிறது.

"தமிழில் உள்ள குட்டிக் கதைகளுள் மிகப் பழமையானதாய் கருதப்படுவது கீரிப்பிள்ளையும் பார்ப்பனியும் என்னும் கதையாகும்."[22] இது சிலப்பதிகாரத்தில் கிளைக் கதையாய் காணப்படுகிறது. இது கதை ஒரு சிறுமாற்றத்துடன் இதோ பிரதேச கதைகள் என்னும் நூலிலும் காணப்படுகிறது. அதாவது சிலப்பதிகாரத்தில் காணப்படும் கதையில் பார்ப்பணி கிரியை கொள்கிறாள். ஆனால் இதோ பிரதேச கதைகள் என்னும் நூலில் காணப்படும் கதையில் பார்ப்பனன் கிரியை கொள்கிறான்.

கவிதைகள்

மரபுக் கவிதைகளிலும் புதுக்கவிதைகளிலும் ஹைக்கூ கவிதைகளிலும் குட்டிக்கதை பாங்குகள் காணப்படுகின்றன.

கவிமணியின் பாட்டியின் வீட்டு பழம் பானை என்ற கவிதை குட்டிக்கதை பாங்கில் உள்ளது.

" பாட்டியின் வீட்டு பழம்பானை - அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதுடா!
உள்ளே புகுந்து நெல் தின்றது தின்று- உடல்
ஊறி புதைந்து பருத்ததடா!
மெல்ல வெளியில் வருவதற்கும் - ஓட்டை
மெத்த சிறிதாகி போச்சுதடா!
பானையைக் காலை திறந்த உடன்-அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியினைக் கண்டதடா! –ஓடிப்
போய் அதை கவ்வியே சென்றதடா!
கள்ள வழியில் செல்பவரை -மென்
காலடி பற்றி தொடர்வானடா!
உள்ளபடியே நடப்பவருக்கு -தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா"23

இக்கதைப் பாடலில் குட்டிக்கதை பானியும் கதை கூறும் நீதியும் இடம்பெற்று இருப்பதை காண முடிகிறது.

"அகன்ற உலகு நான் என்றது அகல்
அழகிய உடல் நான் என்றது திரி
அசையும் உயிர் நான் என்றது சுடர்
உழைப்பு வடித்த உதிரத் துளிகளாய்
தேங்கி எண்ணெய் வாய் திறக்கவே இல்லை" 24

என்னும் சிற்பியின் கவிதையில் உழைக்கும் மக்கள் ஓரங்கட்டப்படும் சமுதாய முரண்பாடுகளை விளக்கும் கதைப்போக்கு காணப்படுகிறது.

"பத்தாவது முறை விழுந்தவனை
பூமி முத்தமிட்டு சொன்னது
நீ ஒன்பது முறை
எழுந்தவன் அல்லவா"[25]

என்னும் ஈரோடு தமிழன்பனின் கவிதை மனம் தளராமல் வேண்டும் என அறிவுறுத்தும் ஒரு குட்டிக் கதை போல உள்ளது.

1947 ஆகஸ்ட் 15
"அவன்
ஒரு பட்டு வேட்டி பற்றிய
கனவில் இருந்தபோது
கட்டி இருந்த கோவணம்
களவாடப்பட்டது"26

என்னும் கவிதையில் குட்டிக்கதை சாயல் தெரிகிறது இக்கவிதையின் கருவை "ஒரு ஊரில் கோவணம் கட்டிய ஒரு மனிதன் இருந்தான்" என்றவாறு தொடங்கி குட்டிக் கதையாக்கலாம். சுதந்திரம் பற்றிய இந்தியாவின் கனவு காணல் நீராய் போனது என்று கதைக்கு கருத்து விளக்கம் தரலாம்.

"பூக்களின் கன்னங்களில் கூட
இப்போது கண்ணீர்
காரணம் வண்டுகளும் வரதட்சனை கேட்கின்றனவாம்"[27]

என்னும் கவிதையையும் "ஒரு பூந்தோட்டத்தில் உள்ள மலர்களின் பனித்துளிகள் காணப்பட்டன" எனத் தொடங்கி குட்டிக் கதையாய் மாற்றலாம். வரதட்சணையானது மங்கையரை மட்டுமல்லாமல் மலர்களையும் வாட்டி வதைக்கிறது என்று கருத்து விளக்கம் தரலாம்.

"நிழல் கொடுக்கும்
குடைக்கு வெயில்"28

என்பது வெகுமதி என்னும் தலைப்பில் உள்ள கதையின் இறுதியில் காணப்படும் ஹைக்கூ கவிதை ஆகும். இதையே காசி ஆனந்தன் பின்வருமாறு கதையாக்கி உள்ளார்.

கொதிக்கும் வெயிலில் குடை பிடித்துப் போன மனிதனையும் அவனது குடையையும் பார்த்துக் கொண்டே இருந்த மின்கம்பம் என்ன உலகம் என்று தனக்குள்ளேயே சலித்துக் கொண்டே மேற்கொண்ட கவிதையைக் கூறியது.

முடிவுரை

தரணியில் முதன் முதலாக வாய்மொழி இலக்கியங்களும் அவற்றைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் தோன்றின என்பதை இவ்வாய்வு கட்டுரை வழியாகத் தெள்ளத்தெளிவாக அறிய முடிகிறது. மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை விளக்கக் கூடிய ஒரு பிரிவாகக் குட்டிக்கதை இருந்ததை எவராலும் மறுக்க இயலாது. அப்படிப்பட்ட குட்டிக் கதைகளை ஆர்வத்தோடு சேகரித்து நூலாகத் தொகுத்து வெளியிடுவதில் முனைவர் சேவியர் அந்தோணியின் பங்கு அளப்பரியது. குட்டிக்கதைகள் பற்றிய முனைவர் இலா. பிரான்சிஸ் சேவியர் அவர்களின் ஆய்வு முடிவுகளும் இக்கட்டுரைக்குத் துணையாய் அமைந்தது எனலாம்.

தொகுப்புரை

கதைகள் என்று தோன்றின என்பதை அறிய இயலவில்லை. அவை மிகப் பழங்காலம் தொட்டே உலகின் பல பாகங்களிலும் தோன்றிப் பரவி வந்துள்ளன. வாய்மொழிப் பாணியில் அமைந்த கதை இலக்கியமே குட்டிக் கதையாகும். கதை இலக்கியம் வாய்மொழி இலக்கியங்களும் மிகுந்த செல்வாக்குடையதாகத் திகழ்கிறது.

வாழ்க்கைச் சிக்கல்களை தீர்க்கவும் சமூக வாழ்க்கையை ஒழுங்குப்படுத்தி கட்டுப்படுத்தவும் பழங்காலத்தில் கதைகள் உருவாக்கப் பெற்றுள்ளன. மனிதன் வாழ வேண்டிய முறையை விளக்கத் தோன்றிய கதை வகைகளுள் குட்டிக் கதையும் ஒன்று.

தமிழ்நாட்டில் மிகப் பழங்காலம் தொட்டே வாய்மொழிக் கதைகள் வழங்கப்பட்டு வந்துள்ளன என்பதற்குத் தொல்காப்பிய நூற்பாக்களும் உரைகளும் சான்றாய் உள்ளன. குட்டி என்னும் சொல்லாட்சி தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. குட்டிக்கதைகளே காப்பியங்களில் கிளைக் கதைகள் இடம் பெற்றுள்ளன.

ஒரு கருத்து அல்லது செய்தியை அழுத்தமாக ஆழமாகப் புலப்படுத்துவது தான் குட்டிக் கதைகளின் தனிப்பெரும் பண்பாகும் என்று சேவியர் அந்தோணி படைப்புகளில் விளக்குகிறார்.

சான்றென் விளக்கம்

1. வைரமுத்து, தமிழாற்றுப்படை, ப.265
2. முனைவர் சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப. 13
3. முனைவர் இலா. பிரான்சிஸ் சேவியர் சே. ச., தமிழில் குட்டிக் கதைகள் ஓர் ஆய்வு, ப. 54
4. முனைவர் ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம்- மரபியல், ப. 584
5. மேலது., ப.586
6. மேலது.,ப.588
7. சாலமன் பாப்பையா, நேருரை.
8. சூ. இன்னாசி(பதி.) சதுரகராதி, ப. 69
9. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், மாணவர் தமிழகராதி, ப.150
10. முனைவர் சேவியர் அந்தோணி சே.ச. செயல் தூண்டும் குட்டிக் கதைகள் விழிப்புணர்வு கதை வரிசை – 02, பக்.7-8
11. முனைவர் சேவியர் அந்தோணி சே.ச., 300குட்டிக் கதைகள், ப.9
12. முனைவர் சேவியர் அந்தோணி சே.ச., முன்னேற்றப் பாதை காட்டும் குட்டிக் கதைகள், ப. 05
13. முனைவர் சேவியர் அந்தோணி சே.ச., சிந்திக்கச் சில குட்டிக் கதைகள் (விழிப்புணர்வு கதை வரிசை), ப.5
14. மேலது.,ப.10

15. முனைவர் இலா. பிரான்சிஸ் சேவியர் சே.ச., தமிழில் குட்டி கதைகள் ஓர் ஆய்வு, ப.1
16. மேலது., ப.6
17. மேலது.,ப.9
18. மேலது., ப. 8
19. மேலது.,ப.18
20. மேலது., ப. 20
21. மேலது., ப. 21
22. மேலது.,ப. 22
23. மேலது.,ப. 25
24. மேலது., 26
25. மேலது.,ப. 26
26. மேலது.,ப. 26
27. மேலது., ப.26
28. மேலது., ப.27

துணைநூற் பட்டியல்

1. வைரமுத்து,தமிழாற்றுப்படை,பிரியதர்ஷினி பிரிண்டோகிராப், சிவகாசி, முதற்பதிப்பு சூலை 2019.
2. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 31 செம்பருத்தி தெரு, பாரிமுனை, சென்னை 600 108, நான்காம் பதிப்பு ஜூலை 2003.
3. சேவியர் அந்தோணி சே.ச. 150 செயல் தூண்டும் குட்டி கதைகள் தொகுதி- 2, வைகறை பதிப்பகம், மெயின் ரோடு, திண்டுக்கல் 624001. மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட் 2016,
4. இலா.பிரான்சிஸ் சேவியர் சே.ச., தமிழில் குட்டி கதைகள் ஓர் ஆய்வு, மணி ஆப்செட் பதிப்பகம், சென்னை 6005. முதல் பதிப்பகம் நவம்பர் 2002.
5. சேவியர் அந்தோணி சே.ச., 300 குட்டிக் கதைகள், பாக்யா பப்ளிசர்ஸ் கே.கே.புதூர், கோயம்புத்தூர் 641 038 முதல் பதிப்பு ஜூின் 2016.
6. சேவியர் அந்தோணி சே.ச., முன்னேற்ற பாதை காட்டும் குட்டி கதைகள் குட்டி கதை வரிசை – 02, வைகறை பதிப்பகம், மெயின் ரோடு, திண்டுக்கல் 624001, முதல் பதிப்பு மே 2016.
7. சேவியர் அந்தோணி சே.ச., சிந்திக்க சில குட்டிக் கதைகள் விழிப்புணர்வு கதை வரிசை, வைகறை பதிப்பகம், மெயின் ரோடு, திண்டுக்கல் 624001, முதற்பதிப்பு மார்ச் 2013.
8. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108, எட்டாம் பதிப்பு ஜூலை 2006. சூ. இன்னாசி பதிப்பகம்
9. சதுரகராதி ,சந்தியா பதிப்பகம், அசோக் நகர் சென்னை 600 83, முதல் பதிப்பு டிசம்பர் 2005.

Tamilmanam

மனிதனை சிந்திக்க வைக்கும் விலங்குணர்வு உடைய அவனை பக்குவப்படுத்தி மக்கள் பண்புடையவனாய் வாழ செய்யவும் முன்னோர்கள் பயன்படுத்திய ஒரு உத்தியே குட்டிக்கதை என்று இலா. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் குட்டிக் கதைகள் குறித்த தம் ஆய்வில் கூறியுள்ளார். குட்டிக்கதை இலக்கியமும் பிறவகை இலக்கியங்களைப் போலவே ஓர் ஒழுங்கமைவு உடையது. குட்டிக்கதைகள் யாவும் தொடக்கம் நிகழ்ச்சி விளக்கம் முடிவு என்னும் கட்டமைப்பை உடையன தொடக்க கால குட்டிக் கதைகள் தலைப்பின்றியே சொல்லப்பட்டிருக்கும் அவற்றைத் தொகுத்து நூலாக்கிய சேவியர் அந்தோணி போன்றோர் கதை கருவுக்கு ஏற்பவும் பாத்திரங்களுக்கு ஏற்பவும் தலைப்புகளைத் தந்திருக்க வேண்டும். நீதி நூல்கள் சங்க இலக்கியங்கள் காப்பியங்கள் கவிதைகள் போன்ற இலக்கியங்களில் குட்டிக்கதைகள் எவ்வாறு இடம்பெறுகிறது என்பது குறித்த இலா பிரான்சிஸ் சேவியர் அவர்களின் கருத்துக்களும் விலக்கப்பட்டுள்ளது இவ்வாய்வு கட்டுரை மூலம் குட்டிக்கதைகள் சமுதாயத்தைச் சீர்படுத்தவும் சமுதாயத்தின் அங்கமான மனிதனைச் சிந்திக்க வைக்கவும் அவனை நெறிப்படுத்தவும் பேரு உதவியாக உள்ளதை அறிய முடிகிறது

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

உரிமம்

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

நமது ஆய்விதழ், சிசி பை (CC BY) உரிமமான கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தை (http://Creativecommons.org//license/by/4.0/) பின்பற்றுகிறது. இது, மூல ஆக்கத்தை முறையான சான்றுடன் பயன்படுத்தவும், மீண்டும் பயன்படுத்தவும், விநியோகிக்கவும், மற்றும் மறுபதிப்பு செய்யவும் அனுமதிக்கிறது.